**வலப்பனை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலப்பனை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலப்பனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் 03 சந்தர்ப்பங்களின் போது மொத்தம் ரூபா 722,217 குறைத்துக் காண்பித்தும் இன்னொரு சந்தர்ப்பத்தின் போது மொத்தம் ரூபா 1,383,512 கூடுதலாகக் காண்பிக்கப்பட்டும் ஒரு சந்தர்ப்பத்தின் போது மொத்தம் ரூபா 329,696 விடுபட்டும் காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டுக்குரிய முன்னைய ஆண்டின் போது செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டித் தொகையாக ரூபா. 568,945 நடைமுறைப் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கடன் மூலதனம் நீண்ட காலம் மற்றும் குறுங்காலம் என வேறாக இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | வலப்பன மற்றும் ராகல ஆயுர்வேத நிலையங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ஆயுர்வேத மருந்துகள் இருப்பின் பெறுமதி மற்றும் 2021 | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது | இருப்புப் பெறுமதிகள் இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டின் போது அரச தரப்பற்ற அமைப்பொன்றினால் வழங்கப்பட்ட நீர் அழுத்த (Non Electric choring design pump with 0.5 hp pressure pump) இயந்திரமொன்றின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டியதுடன் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,785,248 ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,506,562 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு 1988 முதல் 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 21 சந்தர்ப்பங்களின் போது வெவ்வேறு தரப்பினரால் வெவ்வேறு விடயங்களுக்காக சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா. 242,999 பெறுமதியான 21 காசோலைகள் மறுக்கப் பட்டிருந்ததுடன் அம் மறுக்கப்பட்ட காசோலைக்காக அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருமானத்திற்கு எடுக்கப் பட்டிருக்கவில்லை. இக் காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் விசேட கவனம் ஒன்று செலுத்தி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபை நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய தொகை செலவு வைக்கப்பட வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வாடகை** | | |
| றாகல நகரின் 7 கடை அறைகளுக்குரிய 2015 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 3,448,868 நிலுவை வாடகையும் வலப்பன | 2022 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரை ரூபா 110,188 ஆன தொகையை பதிவழிப்ப தற்காக கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ரூபா 548,130 | நிலுவை வருமானம் அறவிடப்ப ட வேண்டும். |

பிரதேசத்தின் 26 கடைகளுக்குரிய 01 இற்கும் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகக் காணப்படும் ரூபா 3,502,648 ஆன கடை வாடகையும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்படவில்லை.

ஆன நிலுவை கடை ஒன்றுக்காக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் ரூபா 261,650 ஆன நிலுவை காணப்படும் 04 கடை உரிமையாளர்களுக்கு வழக்கு தொடரும் செயற்பாடு ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் நிலுவையில் ரூபா 109,000 இதுவரை தற்போது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ரூபா 110,188 தொகையை வைப்புக்கள் மூலம் ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ராகல நகரின் கடை அறை புகையிரத திணைக்களத்தின் காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் வழக்கு தொடர முடியாமல் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.